பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
07 10 2025 TUESDAY 12 40 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் நடவடிக்கைகள், உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியாவை மாற்றியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. உள்நாட்டுப் பாதுகாப்பில் அதிவிரைவுப் படையின் பங்களிப்பு அளப்பரியது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. விடுதலைப் போராட்ட வீராங்கனை குயிலியின் நினைவு தினத்தை ஒட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மரியாதை செலுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் பாதுகாப்பு தொழில் வழித்தட திட்டத்தின் கீழ், 75 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. உலக ஜூனியர் ஜூடோ போட்டியில் இந்தியாவின் Linthoi
6. Chanambam வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

>>>>><<<<<

மத்திய அரசின் நடவடிக்கைகள், உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியாவை மாற்றியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கடந்த 2001ஆம் ஆண்டு இதே நாளில், குஜராத் மாநில முதலமைச்சராக தாம் பொறுப்பேற்றதை சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டு மக்கள் தம்மீது வைத்துள்ள நம்பிக்கை மற்றும் அன்புக்கு நன்றி தெரிவிப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

தேசத்திற்காக பணியாற்ற தமக்கு கிடைத்த வாய்ப்பு, மிகப்பெரிய கௌரவம் என்று குறிப்பிட்டுள்ள அவர். வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க மேலும் உத்வேகத்துடன் பணியாற்ற இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தாம் பிரதமராக பொறுப்பேற்ற பிறகு, மகளிர், இளைஞர் மற்றும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை நினைவுகூர்ந்துள்ள பிரதமர், 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டிருப்பதுடன், கடந்த 11 ஆண்டுகளில் நாடு பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

வால்மிகி ஜெயந்தியை முன்னிட்டு குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ராமாயணத்தை இயற்றிய மகரிஷி வால்மிகியின் பிறந்த நாள், Pargat Diwas-ஆக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், ஆதிகவி வால்மிகியால் இயற்றப்பட்ட ராமாயணம், ராமபிரானின் வாழ்க்கை வரலாறு மற்றும் வாழ்வியல் நற்பண்புகளை எடுத்துக் கூறுவதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆன்மிக விழிப்புணர்வு, கருணை மற்றும் மனிதப் பண்புகளின் அடையாளமாக திகழ்பவர் வால்மிகி என்றும் குடியரசுத்தலைவர் கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன், வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அவரது போதனைகள் மனிதகுலத்திற்கு உத்வேகம் அளிப்பதுடன், நேர்மையான பாதையில் செல்ல வழிகாட்டியாக திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், மகரிஷ் வால்மிகியின் தெளிவான சிந்தனைகள், இந்திய சமுதாயத்திலும், குடும்பங்களிலும் பண்டைக்காலம் முதற்கொண்டு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பததாக கூறியுள்ளார்.

சமூக நல்லிணக்கத்தை அடிப்படையாக கொண்ட அவரது தத்துவங்கள், மக்களின் வாழ்வில் தொடர்ந்து ஒளியேற்றும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் வால்மிகி ஜெயந்தியை ஒட்டி வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

உள்நாட்டுப் பாதுகாப்பில் அதிவிரைவுப் படையின் பங்களிப்பு அளப்பரியது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இந்தப் படைப் பிரிவின் தொடக்க தினத்தை ஒட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அதில் பணியாற்றும் வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தங்களது துணிச்சல் மற்றும் தியாகத்தின் மூலம் பாதுகாப்புப் பணியில், இந்தப் படைப்பிரிவினர் உயர் தரத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பணியின் போது உயிர் நீத்த வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதாகவும் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

உற்பத்திக்கான இந்தியா மற்றும் புத்தொழில் இந்தியா இயக்கத்தினை தொழில்துறையினர் முழுமையாக பயன்படுத்தி, இந்தியா - கத்தார் இடையேயான பொருளாதார ஒத்துழைப்புகளை வலுப்படுத்த வேண்டும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கத்தாரின் தோஹாவில் இந்திய - வர்த்தக தூதுக் குழுவினருடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஆக்கபூர்வமாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

புதுமை கண்டுபிடிப்பு, உற்பத்தி மற்றும் தொழில் முனைவோர் திறனை ஊக்குவிப்பதன் மூலம், மாற்றத்திற்கு வழிவகுக்கும் வளர்ச்சியை ஏற்படுத்த ஒத்துழைக்குமாறு தொழில்துறையினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னதாக, இந்திய சமுதாயத்தினரிடையே உரையாற்றிய திரு. பியூஷ் கோயல், இந்தியா - கத்தார் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்த புதிய வாய்ப்புகளை ஆராய்வதுடன், இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் மற்றும் கலாச்சார உறவுகளை மேலும் வலுப்படுத்த பாடுபடுமாறும் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

விடுதலைப் போராட்ட வீராங்கனை குயிலியின் நினைவு தினத்தை ஒட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மரியாதை செலுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ராணி வேலுநாச்சியாரின் படையில் பணியாற்றிய வீரமங்கை குயிலி, ஆங்கிலேயருக்கு எதிராக கடுமையாக போராடியவர் என்று கூறியுள்ளார்.

நாட்டின் விடுதலை வரலாற்றில் முதல் பெண் தியாகியாக போற்றப்படும் குயிலி, ஆங்கிலேயருக்கு எதிரான தற்கொலை தாக்குதலின் போது, அவர்களது பாதுகாப்பு அரண்களை தகர்த்து, தமது இன்னுயிரை மாய்த்துக் கொண்டவர் என்றும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு தொழில் வழித்தட திட்டத்தின் கீழ், 75 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் நடைபெறும் மூன்றுநாள் விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் கண்காட்சி மற்றும் கருத்தரங்கை இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், மாநிலத்தில் அமைந்துள்ள கப்பல் கட்டும் துறைமுகங்கள் பாதுகாப்புத் துறைக்கு உறுதுணையாக உள்ளதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் – முதலமைச்சர் 59 செகண்ட்ஸ்)*

இந்த கருத்தரங்கில் பேசிய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை இயக்குநர் டாக்டர் D.K. தாஸ், பாதுகாப்பு சாதனங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மூலம், நாட்டிற்கு அதிக வருவாய் கிடைக்கும் என்று தெரிவித்தார்.

பத்து ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக கூறிய அவர், உள்நாட்டு தொழில்நுட்பத்தை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தொழில் நிறுவனங்கள், பாதுகாப்புத் துறையுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சாதனங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், அவை வெற்றிக்கு வழிவகுத்ததாகவும் அவர் எடுத்துரைத்தார்.

முப்படைகளுக்கும் தேவைப்படும் சாதனங்களை தயாரிப்பதுடன், அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம், உலகிலேயே அதிக வளர்ச்சி பெற்ற நாடாக இந்தியா திகழும் என்றும் திரு. டி.கே. தாஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<<

பாகிஸ்தான் ராணுவம் சொந்த நாட்டு மக்களையே, கொன்று குவித்து திட்டமிட்ட இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் மகளிர் அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த விவாதத்தில் பங்கேற்ற, ஐ.நா-வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு. Parvathaneni Harish, பாகிஸ்தான் ராணுவம் இதுவரை 4 லட்சம் பெண்களிடம் அத்துமீறலில் ஈடுபட்டிருப்பதாக கூறினார்.

மகளிர் நலன், அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த ஐ.நாவின் செயல்திட்டங்களை நிறைவேற்ற இந்தியா உறுதிபூண்டிருப்பதுடன், தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலக அமைதிக்காக ஐ.நா பாதுகாப்புப் படைக்கு இந்தியா அளித்து வரும் பங்களிப்பையும் திரு. Harish சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

விசா காலம் முடிந்த பிறகும் தில்லியில் சட்டவிரோதமாக தங்கியிருந்த நைஜீரிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவ விசாவில் இந்தியா வந்த அவரது நடவடிக்கைகள் சந்தேகத்திற்கு இடமான வகையில் உள்ளதாக கிடைத்த தகவலின் பேரில், இந்த நடவடிக்கையை மேற்கொண்ட தில்லி காவல்துறை, அவரை நைஜீரியாவுக்கு திருப்பி அனுப்புவதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளது.

>>>>><<<<<

உலக ஜூனியர் ஜூடோ போட்டியில் இந்தியாவின் Linthoi Chanambam வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

Peru-வின் லிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 63 கிலோ எடைப்பிரிவில் அவர், நெதர்லாந்தின் Joni Geilen-ஐ வென்று இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இதன் மூலம் அவர், இந்தியாவின் முதல் ஜூடோ Cadet உலக சாம்பியன் என்னும் பெருமையை படைத்தார்.

>>>>>END<<<<<